உ
சிவமயம்



கரவெட்டி, துன்னாலை தெற்கு,
கலிகைச்சந்தி கிராமத்தை பிறப்பிடமாகவும்,
குலானையை வசிப்பிடமாகவும் கொண்டவரும்
(66 சிறீ 81) வாகன உரிமையாளரும்,
உயர்சைவத் திருமகனுமான

# உலகேசு இராசரத்தினம்

அவர்களின் பிரிவு குறித்த


# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவநெறி நடந்து

சிவனடி அடைந்த



# உலகேசு இராசரத்தினம்

அன்னைமடி:
25-07-1948

ஆண்டவனடி:
03-07-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் வணக்கம்

*பிடியத னுருவுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.*

## தேவாரம்--திருத்தாண்டகம்

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலை கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# வழிபடு கடவுள் துதி

## நுணுவிற் பிள்ளையார்

செந்நெல்லின் குலமே தம்தலை தாழ்த்தித்
　　திருவடி தொழுதிடு நிலமாம்
பன்னலம் மலியும் நுணுவிலம் பதியில்
　　பரவிடும் அடியருக் கருளும்
முன்னவா முக்கண் முதல்வனே வீர
　　சுத்தியைச் சேதனம் செய்தாய்
இந்நிலத் துறவு வெறுத்தன னையா
　　என்தனை ஏற்றருள் வாயே.

செய்யவள் தன்னுடன் கலைமகள் ஒன்றிடத்
　　தாமரை மலர்மலி சுனையும்
வெய்யிலின் கொடுமை விலக்கிடும் மருதும்
　　விளங்கிடு நுணுவிலம் பதியில்
உய்வழி அருளென உன்னடி பணிவார்
　　உவந்தவா றருள்புரி பவனே
செய்யரு ளென்றே தினமுனைப் பணிந்தேன்
　　திருவடிப் பேறருள் வாயே.

கண்ணிவை நீரைக் கடைவழி சிந்திக்
　　கைகளும் குவிந்திடப் பணிந்து
மண்ணிடை வீழ்ந்து மலரடி ஏத்தி
　　மனமகிழ் வடைந்தது மறிவாய்
மண்ணுற வாழ்வு கொடுமையிற் கொடுமை
　　மனமிது உவந்தநின் பாதம்
விண்ணிடைப் பொருந்த வந்தன னையா
　　விரையடிப் பேறருள் வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூதராயர்

எங்கள்குல தெய்வமென ஏத்திப் பணிந்துனது
துங்கத் திருவடிகள் தான்வணங்கி —இங்கிருந்தேன்
தீதுநில வாழ்விதுதான் பூதரா யத்தேவே
பாதநிழல் தந்தாளு வாய்.

அன்புமலர் தந்தேனே ஆசையுட னேதுதித்து
இன்பவடி நாளும் பணிந்தேனே —துன்பமினி
இங்கெனக்குப் போதும் திருவடியைச் சாரவென
அங்கழைத்தே ஆள்க எனை.

ஊனிற் பொதியுடலத் துற்ற உறவறுத்தேன்
தேனில் இனிய திருவடியே —தானுவந்தேன்
பூதரா யத்தேவே பொன்னிற் திகழுமுன்தன்
பாதமதைச் சார அருள்.

## அத்துளு அம்மன்

காலின் சிலம்பு விலைகூறிக் கடனைத்தீர்க்க வந்தாரை
கோலின் நெறியே கெட்டுவிடக் கொன்ற மாறன் தனதூரை
ஞாலம் திகைக்கத் தீயூட்டி நின்ற தாயே கண்ணகியே
ஞாலத் துறவைப் போக்கிடுக நற்றாள் தந்தே ஆள்வாயே.

குக்கல் இருமல் கூகைக்கட் டின்ன பிணிகள் கண்டாலே
பக்கத் தையர் கிணற்றினிலே தோய்ந்து பணிய அவைமறையும்
மிக்க அழகார் அத்துளுவிற் தாயே பணியா நாளுண்டோ
துக்கம் மலியும் புவியுறவு துறந்தே னென்னை ஆள்வாயே

பற்றை படரும் செடிகொடிகள் பாங்க ராக நிழலிடையே
கற்றைச் சடையாய் கண்ணகியே நவராத் திரிநாள் முதலாக
உற்றுன் அருகே இருந்தனனே உவந்த பேறு தாராயோ
பற்றைத் துறந்தே னுன்பாதம் பற்ற வந்தே னாள்வாயே

## சூலானை அம்மன்

நீறணிவார் நின்னடியார் நித்தம் வலம்வருவார்
ஆறெனவே கண்ணீர் வடியநிற்பர் —பேறிரந்து
நாளும் பணிவாரே நானுமந்த வாறிரந்தேன்
தாளின் துணையெனக்குத் தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தம் மலிகோவில் சார்ந்தே யருகுவந்து
தாம்தம் பிழைகூறி நிற்கையிலே —மாந்தர்பிணி
போக்கி அருளுகிற தாயாரே ஏழைதனைக்
காக்க அழைப்பா யினி.

பூசுவது வெண்ணீறு போற்றுவது நின்பாதம்
பேசுவது நின்பெருமை என்றிருந்தேன் —தேசொளிரும்
நல்குலா னைப்பதியின் தாயாரே நாடிவந்தேன்
அல்லலறுத் தாள்வா யெனை.

## மருதடி ஞானவைரவர்

காக்கத் திருவுள மில்லையோ ஞான வயிரவரே
தேக்குந் துயரப் புவியின் உறவு தனைவெறுத்தேன்
நோக்கும் நினக்கே எனநின்ற என்னை வருத்துவையோ
காக்கும் கருணை வடிவே அடியிற் கனிந்தருளே.

ஆண்டுகள் பற்பல ஐயா மருதடி தானுவந்து
தூண்டு மொளிவாடி வானவ ஞான வயிரவரே
ஈண்டு துயரம் பொறுக்கேன் உனையே பணிபவனை
ஆண்டே யருள்க பிறிதொன்றும் வேண்டே னருளிதியே.

ஈட்டிய செல்வம் உறவினர் எல்லா மிழந்துவிட
வாட்டிய நோயால் மரணித்துப் போகிலும் உன்னருளை
ஈட்டிட வெண்ணிச் சடலமும் உன்னயல் தேடுமையா
காட்டுதி சூலப் படையனே பேறிந்த ஏழைக்கங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற

திரு. உலகேசு இராசரத்தினம் அவர்கள் நினைவான

# இரங்கற் பாக்கள்

## திதி வெண்பா

தக்கபவ ஆண்டுமதி ஆனிதனைச் சாரபர
பக்கத் தசமிதிதி பண்புநலம் —மிக்கமகன்
தேசுடைய ராசரத்னம் செங்கையன லேந்துமந்த
ஈசனடி உற்றுயர்ந்த நாள்.

### மனைவி இராசேஸ்வரி

வயதுபதி னாறெனக்கு வாய்த்திட்ட வேளைதெய்வ
நியதியெனப் பொற்றாலி நெஞ்சினிக்கப் பூட்டினீரே
துக்கங்கள் துயரங்கள் துளியேனும் அறியாது
பக்கத்தே நின்றுசெல்வ வாழ்வுபெறச் செய்தீரே
நாலுபேர் முன்னிலையில் தலைநிமிரச் செய்துள்ள
காலமெல்லாம் சிறப்பாக வைத்தீரே வாயினிக்கக்
கூப்பிட்டுக் கொஞ்சவுள்ள மக்களொரு மூவரையும்
பூப்போலப் பேணியிங்கே பிரியமாய் வளர்த்தீரே.
வாழுமிந்த இளவயதில் வாயலுக்க அழுதழுது
வீழுகிறேன் வெறுந்தரையில் வேறென்ன செய்வேனோ
குகதாஸ் வெளிநாட்டிற் குழறியழு தேங்கிடுவான்
மிகுநேசப் பிரேமதாஸ் நெஞ்சுருகி நிற்கின்றான்
வாழ்வின் தலைவாசல் வந்தகுக நந்தினியோ
சூழ்துயர வெள்ளத்திற் துவண்டு கிடக்கின்றாள்
ஆற்றுவனோ இவர்களையே ஆறவழி தெரியாநான்
கூற்றுவனைக் கொல்லஒரு கொடுயமனே வாரானோ
அள்ளிப் படைத்தகையால் அழுதழுது இலையிடத்தே
கிள்ளி எறியவைத்த கொடுமைக்கே என்செய்வேன்

### மகன் குகதாஸ் (*பிரான்ஸ்*)

பாசத்தை வெள்ளமெனச் சொரிந்த அப்பா
பிறநாடு போயுழைத்து மீள என்றே
நேசித்த உங்களையும் அம்மா தம்பி
நம்மன்புச் சோதரியாம் இவரை விட்டுப்
பூசித்த இறைதுணையால் இங்கு வந்தேன்
போய்விட்ட சேதியது கிடைத்த போது
ஆசைக்கே இடிவிழநான் அதிர்ந்து போனேன்
ஆற்றாத துயர்க்காளாய் அழுகி றேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் பிரேமதாஸ்

அள்ளிமடி மீதிருத்திக் கைய ணைத்து
ஆசையுடன் கொஞ்சியென்னை வளர்த்த அப்பா
உள்ளபொழு தேயுழைக்க வழியும் காட்டி
உதவினிரே உங்களது ஆவி தன்னைக்
கொள்ளயமன் இவ்வளவு விரைவாய் வந்து
கொடுமைசெய்வா னெனஎண்ண வில்லை கையாற்
கொள்ளிவைத்துக் குடமுடைத்துக் கதறு கின்றேன்
கொண்டதுயர் ஆறவழி காணேன் அப்பா.

## மகள் குகநந்தினி

பொங்கிவரும் கங்கையெனப் பாசம தன்னைப்
பொழிந்தன்பு பெருகவெனக் காத்த அப்பா
தங்கியொரு பொழுதேனும் ஆற வில்லை
சில்வண்டு போற்பறந்து அனைத்தும் தேடி
இங்கெமக்கு வேண்டுவன எல்லாம் தந்து
எம்வாழ்வின் சிறப்புக்களைக் காணா முன்னம்
எங்குமறைந் தோடினிரோ இனியென் செய்வோம்
இருளாக்கிப் போனதென்ன அப்பா ஐயோ.

## தாயார்

இடுப்பிரண்டும் வலியெடுக்கக் கையை யூன்றி
என்செய்வேன் என்றழுது துடித்துப் பெற்று
எடுத்திருகை ஏந்தியதும் எல்லா நோவும்
என்னைவிட்டு ஓடஉன்னைக் காத்தேன் குஞ்சே
வடிக்கிறது கண்ணிரண்டும் தலையிற் கொள்ளி
வைக்கவுள்ள நீபோன துயரத் தாலே
வெடிக்கிறதே என்னிதயம் வெதும்பு கின்றேன்
வேதனையே சூழவிங்குத் துடிக்கி றேனே.

## உடன்பிறந்த சகோதர சகோதரிகள்

அண்ணனுள்ளான் தம்பியுள்ளான் படைக்கஞ்சான் என்றவாறு
துணையிருந்தாய் மிடுக்கோடு வாழவைத்தாய்
நம்பி எம்எண்ணத்தில் இடியே வீழ்த்தி
நடந்திட்டாய் இதைநினைக்க நெஞ்சுநாளும்
வெம்பிவெம்பி வெடிக்கிறதே வேகுறோம் நாம்
விதிகாட்டநீ நடந்துவிட்டாய் சகோதரனே!
சகோதரனே இனி யாரை அழைக்கலாகும்
தருக்கிழந்து தவிக்கின்றோம் தேம்பினோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கினிய உடன்பிறப்பே தம்பி இந்த
உலகத்தில் எமக்குரிய துணையே என்றும்
உன்னரிய வாழ்வுதான் எமது வாழ்வும்
என்றிருந்தோம் இடைநடுவில் உயிர் விட்டாயே
எம்முடைய பிற்காலம் கடமை செய்வாய்
என்றிருக்க தலையிலிடி வீழ்த்தி விட்டு
உன்னுடைய கடமைசெய்ய வைத்துப் போனாய்
உறுதுயரம் தான்கரிது என் செய்வோமோ.

## மாமன் சின்னையா (சீனப்பா)

சிரித்ததுவும் தேடியதும் கண்டே னல்லால்
சீறியதும் சினந்ததுவும் கண்டே னில்லை
ஒருத்தருக்கும் தீமைமனத் தெண்ணா வாழ்வு
கொண்டவுங்கள் உயிர்கவர வந்த காலன்
எரித்தழிந்து போகாதே போய்விட் டானே
எம்குடும்ப ஒளிவிளக்கே மான நெஞ்சு
வருத்தியென்னை வாட்டுதையோ வாடு கின்றேன்
வாழ்வினிமேல் துயர்தீரும் வழியுண் டாமோ.

## மாமன், மாமியர்

குலம்விளங்கு குணம்படைத்த மருக னேநீ
குறைபுரிந்த தறியோமே எதுவந் தாலும்
கலங்குகிற ஒருத்தனல்ல கடமைப் பட்டுக்
கொள்ளவும்நீ விரும்பியது இல்லை வாழ்வு
பலம்மிகுந்த, பயன்மிகுந்த தென்று சொல்லும்
படிவகுத்த நடையப்பா நீயில் லாமல்
நலமிழந்தோம் நெஞ்சழிந்தோம் கண்ணின் நீரால்
நனைகின்றோம் என்சொல்லி ஆறு வோமே.

## உடன்பிறவாத சகோதர, சகோதரியர்

கண்டபொழு தேமுகத்திற் சிரிப்புக் கூடும்
கனிந்தமொழி தான்பேசிச் சுகங்கள் கேட்டுக்
கொண்டுதவத் துடிக்கின்ற பரிவு கண்டோம்
குறைபேசும் வழக்கமில்லை கடவு ளுக்குத்
தொண்டுசெய்து நின்றவனுன் வாழ்வ ழித்துத்
துயர்நமக்கேன் தந்தானோ கதறு கின்றோம்
கொண்டஎங்கள் சோகமிது தீரக் கோடி
ஆண்டாகும் சோதரனே என்செய் வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனியர்

நல்லமுளை மூன்றையிந்த மண்ணிற் பெற்று
நல்லதொரு மனைவியுடன் வாழக் கண்டோம்
சொல்லுமணக் காட்சிகளைக் காணா முன்னம்
துடித்தழுங்கள் எனவிட்டுச் சென்றீ ரத்தான்
கல்விதயம் கொண்டவரும் கதறு கின்றார்
கண்கலங்கி அழாதவரும் உண்டோ இல்லை
வல்லவனே குறைவயதில் மறைந்த சோகம்
வருத்துதப்பா பலமிழந்து துடிக்கி றோமே.

## சகலன்மார்

உடன்பிறந்த சோதரனே என்னும் வண்ணம்
ஊருலகு பேசிடவே இணைந்து வாழ்ந்தீர்
அடங்கிநடந் திட்டதல்லால் ஆண வத்தை
அரைநொடியும் அறியோமே அன்பு நெஞ்சிற்
படும்படியாய்ப் பேசுவதே உங்கள் பண்பு
பெருங்குணத்தின் ஒருவடிவே மாண்ட வேளை
அடங்கரிய சோகத்தால் அவல மானோம்
ஆறுதற்கே வழியறியோம் கதிகெட் டோமே

## பெறாமக்கள்

பெற்றெடுத்த மக்களென்றே பிரியம் காட்டி
பெருமனது கொண்டவரே வாழ்ந்தீர் எங்கள்
சுற்றமெல்லாம் போற்றுமொரு புனித னாகத்
துணைநின்ற ஐயாவே இறந்த சேதி
பெற்றவுடன் பதைபதைத்துப் பதறிப் போனோமே
பாவியரே நாமினியும் இனிய வார்த்தை
பெற்றிடுதல் கூடுவதோ கலங்கு கின்றோம்
பரமனடிப் பேறமைய வழுத்து வோமே.

## மருமக்கள்

தாவிவரின் அணைக்கஇரு கைகள் உண்டு
தக்கபுத்தி மதிசொல்லும் வாயு முண்டு
சேவைபுரி கின்றமனப் பண்பு முண்டு
சிரித்தமொழி காட்டுகிற முகமு முண்டு
சாவையணைத் திட்டீர்கள் என்ற போது
சாம்பியதே எங்கள்மனம் மாமா வாழ்விற்
பாவியரே ஆயினமே நெஞ்சிற் சோகம்
படரஇங்கே கதறுகிறோம் மாமா ஐயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நண்பர்கள்

எதுவொன்று வேண்டுமென்று கேட்ட போதும்
இல்லையென்று சொன்னதில்லை தந்து இன்னும்
எதுவேண்டு மென்கின்ற இதய நண்பர்
இப்படிநீர் இடைநடுவில் ஆவி விட்டுப்
பதையுங்கள் எனவிட்டுப் போவீ ரென்று
பாவியர்நாம் கனாக்கூடக் கண்ட தில்லை
நதியென்று கண்ணீரைப் பாய்ச்சு கின்றோம்
நல்லவனே அரனடியில் அமைதி காண்பீர்.

### சுற்றமயல்

வந்ததொரு துன்பமெனிற் தயக்க மின்றி
வாதம்பி ராசரத்னம் இதைச்செய் என்றால்
எந்தவிதத் தடையுமில்லை எவையும் செய்து
எம்மோடு பழகியதை எண்ணு கின்றோம்
இந்தவிதம் பிஞ்சுநாள் தன்னில் நீங்கள்
இறந்ததென அறிந்ததுமே அதிர்ந்து போனோம்
நொந்தழுது மாய்வதுதான் விதியோ தம்பி
நம்மரனார் திருவடியில் அமைக சாந்தி

## தேற்றம்

நேற்றைக் கிருந்தாரை இன்றிழக்கும் இப்புவியில்
கீற்றைப் புனையீசன் பேறுற்ற —ஆற்றல்மிகு
ராசரத்னம் மாளத் துயரேன் தவிர்தமைக
பேசுமறம் செய்துயர்க வே.

—பொற்கைகரன்.

## நன்றி

அன்பின் இதயஒளி திரு. உ. இராசரத்தினம் அமரத்துவம் அடைந்த வேளையிலும், அந்தியேட்டி வேளையிலும் வந்து கலந்து துக்கம் பகிர்ந்தோர், துயராறச் செய்தி தந்தோர் பல வித உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் இதய நன்றி.

குலானை, மனைவி, மக்கள்,
துன்னாலை மேற்கு, தாய்.
கரவெட்டி.
02-08-94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org